

**What works best: 2020 update**

**Overview of research into best teaching practices**

**Information for parents and carers of school students**

# ‘செயலூக்கம் மிக்க கற்பித்தல் முறைகள்: 2020-ஆம் ஆண்டுப் புதுப்பிப்புகள்

## மிகச் சிறந்த கற்பித்தல் நடைமுறைகள் பற்றிய ஆய்வு குறித்த கண்ணோட்டம்

### பாடசாலை மாணவ-மாணவியரது பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

உங்களுடைய பிள்ளையின் கற்றலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவது எது என நாம் அறிந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டே எமது கற்பித்தல் முறைமை அமைகிறது என்பதை உறுதிப்படுத்துவதில் NSW அரச பாடசாலைகள் பற்றுறுதி கொண்டுள்ளன.

செயலூக்கம் மிக்க கற்பித்தல் முறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான ஆய்வுகளின் புதுப்பிப்புகளை 2020-ஆம் ஆண்டு NSW ‘கல்வித் திணைக்களம்’ வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையானது ‘செயலூக்கம் மிக்க கற்பித்தல் முறைகள்: 2020-ஆம் ஆண்டுப் புதுப்பிப்புகள்’ என்று அழைக்கப்படுகிறது. மாணவ-மாணவியரது மேம்படுத்தப்பட்ட கற்றலுக்கு உதவக்கூடிய வகையில் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் பின்பற்ற முடியுமான, ஆதாரங்களின் அடிப்படையிலான எட்டு கற்பித்தல் முறைகளை இது கோடிட்டுக் காண்பிக்கிறது. ‘செயலூக்கம் மிக்க கற்பித்தல் முறைகள்: 2020-ஆம் ஆண்டுப் புதுப்பிப்புகள்’ எனும் இந்த அறிக்கை வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு ஆசிரியர்களது போதிப்பிற்கும், மாணவ-மாணவியரது கற்றலுக்கும் பயன்படக்கூடிய தகவல்களை அளிக்கும் சாத்தியம் உள்ளது.

உங்களுடைய வீட்டில் உங்களுக்கு உதவக்கூடிய சில யோசனைக் குறிப்புகள் உள்ளடங்க, இந்த எட்டு ‘செயலூக்கம் மிக்க கற்பித்தல் முறைக’ளைப் பற்றிய சாராம்சம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. உங்களுடைய பிள்ளையுடன் ஒரு நேரத்தில் ஒரு கேள்வித் தொகுப்பை மட்டுமே நீங்கள் பயன்படுத்தவேண்டும் என்பது எமது ஆலோசனையாகும்.

ஆதாரங்களின் அடிப்படையிலான பாடசாலைகளுக்கான மற்ற மூலவளங்களுடன், ‘What works best: 2020 update’ -ஐ நீங்கள் education.nsw.gov.au/about-us/educational-data/what-works-best-2020-update எனும் வலைத்தலப் பக்கத்தில் காணலாம்.

## 1. உயர்வான எதிர்பார்ப்புகள்

ஆசிரியர்கள் உயர்வான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கும்போது மாணவ-மாணவியர்கள் மிக நல்ல முறையில் கல்வி பயில்வர். உயர்வான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதென்பது: மாணவ-மாணவியர்களின் ஆர்வத்தை ஈர்க்க ஆசிரியர்கள் கடுமையாகப் பணியாற்றுகிறார்கள், புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ள மாணவ-மாணவியர்களை ஊக்குவிக்கிறார்கள், தேவைப்படும்போது அவர்களுக்கு உதவுகிறார்கள், அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் மற்றும் கற்கவேண்டும் என்பதைப் பற்றி நிலையாகவும் மற்றும் தெளிவாகவும் இருக்கிறார்கள், மற்றும் அவர்களது தேவைகளுக்கேற்ப தாம் போதிக்கும் வழிகளை மாற்றிக்கொள்கிறார்கள் என்பதைக் குறிக்கும்.

**பின் வரும் விடயங்களை உங்கள் பிள்ளையிடம் சோதித்துத் பாருங்கள்**

- ஆரம்பப் பள்ளி மாணவ-மாணவியர்களுக்கு: உனக்குத் தெரிந்த விடயங்கள் என்ன என்றும், உன்னால் செய்ய இயலுமான விடயங்கள் என்ன என்பதையும் உன்னுடைய ஆசிரியருக்கு எவ்வாறு காண்பிப்பாய்?
- ‘செகண்டரி’ பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: அடுத்ததாக என்ன கற்றுத்தர வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, உன்னுடைய படிப்பில் நீ எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை உன்னுடைய ஆசிரியர் தெரிந்துகொள்ளவேண்டும். உனக்குத் தெரிந்த விடயங்கள் என்ன என்றும், உன்னால் செய்ய இயலுமான விடயங்கள் என்ன என்பதையும் உன்னுடைய ஆசிரியருக்கு நீ எவ்வாறு காண்பிப்பாய்?

## 2. ‘வெளிப்படையான நேரடி கற்பித்தல் முறை’ (Explicit teaching)

குறிப்பாகப் புதிய விடயம் ஒன்றைக் கற்றுக்கொள்ளும்போது, ஆசிரியர்கள் நேரடியான, வெளிப்படையான முறையில் கற்பித்தால், மாணவ-மாணவியர்கள் அதைச் சிறப்பாகக் கற்றுக்கொள்வார்கள். மாணவ-மாணவியர்கள் ஒரு விடயத்தை ஏன் கற்றுக்கொள்கிறார்கள், ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்த விடயங்களுடன் அது எவ்வாறு தொடர்புடையதாக இருக்கிறது, அவர்கள் என்ன செய்ய வேண்டுமென ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள், அதை எப்படிச் செய்யவேண்டும் மற்றும் மாணவ-மாணவியர்கள் அதில் வெற்றியடைந்த பிறகு அது எப்படி இருக்கும் என்ற விடயங்கள் இந்த ‘நேரடி போதிப்பு முறை’யில் உள்ளடங்கியிருக்கும்.

**பின் வரும் விடயங்களை உங்கள் பிள்ளையிடம் சோதித்துத் பாருங்கள்**

- ஆரம்பப் பாடசாலை மற்றும் ‘செகண்டரி’ பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: இன்றைக்கு நீ புதிதாகக் கற்றுக்கொண்ட ஏதாவது ஒன்றைப் பற்றி எனக்குச் சொல். அதைக் கற்றுக்கொள்வது உனக்கு எளிதாக இருந்ததா, அல்லது நீ அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டி இருந்ததா? அந்தப் புதிய விடயம் உனக்கு எப்போது ‘புரிந்தது’ என்று உன்னால் எப்படிச் சொல்ல இயலும்?

## 3. செயலூக்கமான பின்னூட்டல்கள்

ஆசிரியர்கள் செயலூக்கமான பின்னூட்டல்களை அளிக்கும்போது மாணவர்களுடைய கற்றல் சிறப்பாக இருக்கும். செயலூக்கமான பின்னூட்டல் என்பது ஆக்கத்தன்மை கொண்டதாகவும், விபரமானதாகவும், குறிப்பிட்டதாகவும் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பாட வேலையில் மாணவ-மாணவியரது செயல்திறன் எப்படி இருந்தது என்பதையும், தவறுகள் எங்கே செய்யப்பட்டுள்ளன, மற்றும் வருங்கால முன்னேற்றத்திற்காக என்ன செய்யவேண்டியிருக்கும் என்பனவற்றின் மீது இது கவனம் செலுத்துகிறது.

**பின் வரும் விடயங்களை உங்கள் பிள்ளையிடம் சோதித்துப் பாருங்கள்**

- ஆரம்பப் பாடசாலை மற்றும் ‘செகண்டரி’ பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: புதிய ஒரு விடயத்தைக் கற்றுக்கொள்ளும்போது, நீ சரியான பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறாய் என்பது உனக்கு எப்படித் தெரியும்? அடுத்த முறை இதைவிட இன்னும் சிறப்பாக எப்படிச் செய்யலாம் என்பதை நீ எப்படித் தெரிந்துகொள்வாய்?

## 4. கற்றல் பற்றிய தரவுகளைப் பயன்படுத்திக் கற்பித்தல்

தமது கற்றல் வேலைகளில் மாணவ-மாணவியர்கள் இப்போது எந்தக் கட்டத்தில் இருக்கிறார்கள், மற்றும் அடுத்ததாக எதனைக் கற்றுக்கொடுக்க வேண்டும் எனத் திட்டமிடுவதை உறுதி படுத்திக்கொள்ள ஆசிரியர்கள் தரவுகளைப் பயன்படுத்தும்போது மாணவ-மாணவியர்களுடைய கற்றல் சிறப்பாக இருக்கும். இப்படிச் செய்வதற்காக ஆசிரியர்களுக்குப் பயன்படக்கூடிய எந்தவொரு தகவலும் 'தரவு' ஆகும். வகுப்பில் நடைபெறும் வினா-விடை நிகழ்ச்சிகள், ஆசிரியரது கேள்விகளுக்கு மாணவ-மாணவியர் அளிக்கும் பதில்கள், அவர்களது பாட வேலைகள் மற்றும் முறைப்படியான தேர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பலவிதமான விடயங்களிலிருந்து வருபவையாக தரவுகள் இருக்கலாம்.

## 5. மதிப்பீடுகள்

உயர்தர மதிப்பீட்டு முறைகளை அசிரியர்கள் பயன்படுத்தும்போது மாணவ-மாணவியர் சிறப்பாகக் கற்பர். அவர்கள் தமது கல்வியில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை மதிப்பீடு செய்வதற்காக ஆசிரியர்கள் பயன்படுத்தும் பல்வகைப்பட்ட நடவடிக்கைகளை இந்த மதிப்பீடு என்பது குறிக்கும். தேர்வுகள் மற்றும் கருத்தாய்வுகள் போன்ற முறைப்படியான நடவடிக்கைகளை இது உள்ளடக்குவதோடு, மாணவ-மாணவியர்களைக் கேள்விகள் கேட்பது மற்றும் அவர்கள் செய்யும் வேலைகளின் மாதிரிகளை மதிப்பீடு செய்வது போன்ற முறைசாரா நடவடிக்கைகளையும் இது உள்ளடக்கும்.

### பின் வரும் விடயங்களை உங்கள் பிள்ளையிடம் சோதித்துத் பாருங்கள்

- ஆரம்பப் பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: உனக்குத் தெரிந்த விடயங்கள் என்ன என்றும், உன்னால் செய்ய இயலுமான விடயங்கள் என்ன என்பதையும் உன்னுடைய ஆசிரியருக்கு எவ்வாறு காண்பிப்பாய்?
- 'செகண்டரி' பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: அடுத்ததாக என்ன கற்றுத்தர வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, உன்னுடைய படிப்பில் நீ எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை உன்னுடைய ஆசிரியர் தெரிந்துகொள்ளவேண்டும். உனக்குத் தெரிந்த விடயங்கள் என்ன என்றும், உன்னால் செய்ய இயலுமான விடயங்கள் என்ன என்பதையும் உன்னுடைய ஆசிரியருக்கு எவ்வாறு காண்பிப்பாய்?

## 6. வகுப்பறை நிர்வாகம்

ஆசிரியர்கள் தமது வகுப்புகளை நல்ல முறையில் நிர்வாகம் செய்யும்போது மாணவ-மாணவியர்களின் கற்றல் சிறப்பாக இருக்கும். பாதுகாப்பான, நேர்முகமான மற்றும் ஆர்வமூட்டக்கூடிய கற்றல் சூழ் நிலைகளை ஊக்குவிப்பதற்காக ஆசிரியர்கள் மேற்கொள்ளும் பல விதமான நடவடிக்கைகள் வகுப்பறை நிர்வாகத்தில் உள்ளடங்கும்.

### பின் வரும் விடயங்களை உங்கள் பிள்ளையிடம் சோதித்துத் பாருங்கள்

- ஆரம்பப் பள்ளி மாணவ-மாணவியர்களுக்கு: உன்னுடைய வகுப்பில் நீங்கள் பின்பற்றவேண்டிய விதிமுறைகள் அல்லது எதிர்பார்ப்புகள் உள்ளனவா? சிலவற்றைச் சொல்ல முடியுமா? அவற்றைப் பின்பற்ற நீங்கள் கடுமையாக உழைக்கும்போது என்ன ஆகும்? நீங்கள் அவற்றைப் பின்பற்றவில்லை என்றால் என்ன நடக்கும்?
- 'செகண்டரி' பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: பாடசாலைக்கான அல்லது வகுப்பறைக்கான விதிமுறைகள் அல்லது எதிர்பார்ப்புகள் உன்னுடைய பாடசாலையில் உள்ளனவா? அவற்றில் சிலவற்றை உன்னால் சொல்ல இயலுமா? மாணவ-மாணவியர்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கும்போது என்ன ஆகும்? மாணவ-மாணவியர்கள் அவற்றைப் பின்பற்றவில்லை என்றால் என்ன ஆகும்?

## 7. பொதுநலம்

மாணவ-மாணவியர்களது பொதுநலம் நல்ல நிலையில் இருக்கும்போது அவர்களுடைய கற்றல் சிறப்பாக இருக்கும். மாணவ-மாணவியர்களது பொது நலம் என்பது ஒரு பரந்த அர்த்தமுள்ள பதம், நல்ல மனநலம், உடல்நலம் மற்றும் உணர்வு-பூர்வ நலம், படிப்பு வேலைகளில் உதவி கிடைக்கிறது என்ற எண்ணம், வலுவான உறவுமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் உறுதியான அர்த்தங்களையும், நோக்கங்களையும் கொண்டிருத்தல் ஆகியன இதில் உள்ளடங்கும்.

- பாதுகாப்பானதொரு சூழலை உருவாக்கல்
- தாம் இருக்கும் இடத்தில் தாமும் ஒரு அங்கம் என மாணவ-மாணவியர்கள் உணர்வதற்கு உதவல்
- மாணவ-மாணவியர்களது கருத்துகள் மற்றும் நோக்குகளுக்கு மதிப்பளித்தல்
- கற்றல் வேலைகளில் ஆர்வம் கொள்ள அவர்களை ஊக்குவித்தல்
- அவர்களது உணர்வலைகளைச் சமாளிக்க அவர்களுக்கு உதவல்
- ஆசிரியர்கள் மற்றும் இதர மாணவ-மாணவியர்களுடன் நேர்முகமான தொடர்புறவுகளை உருவாக்கிக்கொள்வதில் அவர்களுக்கு உதவல்.

### பின் வரும் விடயங்களை உங்கள் பிள்ளையிடம் சோதித்துத் பாருங்கள்

- ஆரம்பப் பாடசாலை மற்றும் 'செகண்டரி' பாடசாலை மாணவ-மாணவியர்களுக்கு: பாடசாலையைப் பற்றி நீ இப்பொழுது என்ன நினைக்கிறாய்? சிரமமான, அல்லது சவால் விடுக்கும் விடயங்கள் ஏதும் உள்ளனவா? உன்னுடைய நாள் சரியில்லை என்றால், அல்லது உனக்கு ஏதும் பிரச்சினை என்றால் நீ என்ன செய்யவேண்டும், அல்லது யாரோடு நீ பேசவேண்டும் என்பது உனக்குத் தெரியுமா? உன்னைப் பார்த்துக்கொள்ளும் யாரும் பாடசாலையில் இருக்கிறார்களா?



## 8. ஒத்துழைப்பு

ஆசிரியர்கள் ஒருவரோடொருவர் ஒத்துழைப்பாய்ப் பணியாற்றும்போது மாணவ-மாணவியர்களுடைய கற்றல் சிறப்பாக இருக்கும். தமது கற்பித்தல் முறைகளை மேம்படுத்திக்கொள்வதற்காக ஆசிரியர்கள் பாடசாலைக்கு அப்பாற்பட்ட மற்ற ஆசிரியர்கள் மற்றும் வல்லுனர்களுடன் இணைவாய்ப் பணியாற்றுவதென்பது இந்த 'ஒத்துழைப்'பில் உள்ளடங்கும். தமது பாடங்களையும் கல்வி நடவடிக்கைகளையும் ஆசிரியர்கள் சேர்ந்து திட்டமிடல், ஒருவருடைய பாட வகுப்புகளை மற்றவர் அவதானித்துப் பின்னூட்டல்களை வழங்கல் மற்றும் தமது பணிகளோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தல் மற்றும் ஆயோசித்தல் ஆகியன செயலூக்கம் மிக்க ஒத்துழைப்பில் உள்ளடங்ககலாம்.

### உதாரணத்திற்கு…

#### Aldavilla Public School -இன் உயர் எதிர்பார்ப்புகள்

உயர்வான எதிர்பார்ப்புகளின் மீது தாம் கொண்டுள்ள கவனக் குவிவே தமது வெற்றியின் பெரும்பகுதிக்குக் காரணம் என்று Aldavilla Public School கூறுகிறது. தாம் விரும்பும் எவ்வொரு நிலையும் தாம் அடையலாம் என்று மாணவ-மாணவியர்கள் தொடர்ந்து நினைவூட்டப்படுகின்றனர். Aldavilla Public School-இல் உயர்வான எதிர்பார்ப்புகள் ஊக்குவிக்கப்படும் ஒரு வழி, இலக்குகளை ஏற்படுத்திக்கொள்வதாகும். சாதிக்கவல்ல கற்றல் இலக்குகளை நோக்கிப் பயணிக்குமாறு மாணவ-மாணவியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர், மற்றும் தமது அடுத்த இலக்கினை அடையுமாறு மாணவ-மாணவியர்களை ஊழியர்கள் தொடர்ந்து ஊக்குவித்துவருகின்றனர்.

'பாடசாலை தழுவிய' ('whole-school') அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றுவதன் மூலம் இந்தப் பாடசாலை உயர்ந்த எதிர்பார்ப்புகளை ஊக்குவிக்கிறது. உதாரணத்திற்கு, ஒவ்வொரு வகுப்பும் ஒரே மாதிரியான நடத்தை நிர்வாக முறைமையைப் பின்பற்றுகிறது. மாணவ மாணவியர்கள் -ஆசிரியர்களுக்கிடையேயான தொடர்புறவுகளுக்கும் முந்துரிமையளிக்கப்படுகிறது. மாணவ-மாணவியர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அனைத்து ஆசிரியர்களும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர் மற்றும் மாணவ-மாணவியர்களைப் பற்றித் தாம் கரிசனப்படுகிறோம் என்பதை அவர்களுக்குக் காண்பிக்கின்றனர். வார-இறுதி நாட்களை மாணவ-மாணவியர்கள் எப்படிக் கழித்தனர் என்று கேட்பது, அல்லது மாணவ-மாணவி ஒருவருடைய சகோதர சகோதரிகள் யார் என்று தெரிந்துகொள்வது ஆகியவற்றின் மூலம் ஆசிரியர்கள் தமது மாணவ-மாணவியர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

### உதாரணத்திற்கு…

#### செயல்பாட்டு முறைகளை மேம்படுத்திக்கொள்வதற்காக Concord High School -இல் பாட வேலைத் தரவுகளின் பயன்பாடு

Years 7-11-இல் தமது பாடத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கு ஒவ்வொரு ஆண்டிற்குமான HSC தரவுகளை Concord High School -இன் கணிதப் பிரிவு பயன்படுத்துகிறது. கணிதப் பாடத்தின் தலைமை ஆசிரியர் கூறுகிறார்: "மாணவ-மாணவியர்கள் தவறு செய்த கேள்விகளை நாங்கள் கூர்ந்து நோக்கி, மாணவ-மாணவியர்கள் தவறவிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு அவற்றை மீள்-திட்டமிட முயற்சிப்போம். உதாரணத்திற்கு, HSC -யில் எமது மாணவ-மாணவியர்கள் 'significant figures'-இல் (குறிப்பிடத்தக்க புள்ளிவிவரங்கள்) சிரமப்பட்டுக்கொண்டிருந்தனர், ஆகவே இப்போது நாங்கள் 'significant figures'-ஐ Year 7-இற்குக் கொண்டுவந்திருக்கிறோம். 'significant figures'-ஐப் பயன்படுத்தி 'அண்மைக் கணிப்பு' (approximate) செய்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ள மாணவ-மாணவியர்களுக்கு ஆறு ஆண்டுகள் இருக்கின்றன எனப்தை இது குறிக்கும். இப்போது 'significant figures' ஒரு பிரச்சினையல்ல."

சில வேளைகளில், பாடங்களின் வரிசைக்கிரமத்தை மாற்றியமைக்க வேண்டிய தேவை மீள்-திட்டமிடலில் இடம்பெறக்கூடும், ஏனெனில், இப்படிச் செய்தால், தமது சொந்த அறிவைப் பயன்படுத்தி இந்தப் பாடங்களைப் பற்றிய அடிப்படைக் கருத்துகளை விளங்கிக்கொள்வதற்கான அதிக வாய்ப்புகள் மாணவ-மாணவியருக்கு ஆண்டு முழுதும் இருக்கும். கணிதப் பாடத்தின் தலைமை ஆசிரியர் தொடந்து கூறுகிறார்: " 'Probability' (நிகழ்தகவு) என்ற தலைப்பில் எமது மாணவ-மாணவியர்களது கற்றல் உண்மையில் மிக மோசமாக இருந்தது. ஆகவே எமது கல்வித் திட்டங்களைப் பார்வையிட்டபோது, 'probability' -யை ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் நாங்கள் செய்துகொண்டிருப்பதைக் கண்டோம். ஆகவே நாங்கள் இந்தப் பாடம் நடத்தப்படுவதற்கான நேரத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியதன் காரணமாக, சில வகுப்புகளில் மாணவ-மாணவியர்கள் இப்பாடத்தினை ஆரம்ப காலத்திலேயே பார்க்கின்றனர்."

### தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், தயவுசெய்து உங்களுடைய பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ளுங்கள். உங்களுடைய விசாரிப்பில் மொழிபெயர்துரைப்பாளர் ஒருவரது உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'-யை 131 450-இல் அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குனருக்குக் கொடுங்கள், உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.